ET/SSS/2022(2023)/OL/22/T/A/S-1

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ | 2022 (2023)

# Student Seminar Series

## ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව

Practice Paper | උපකාරක ප්‍රශ්න පත්‍ර

# Tamil Language & Literature

# தமிழ் மொழியும் இலக்கியமும்



**Answer Sheet - I,II,III** | விடைத்தாள் - I,II,III (மொழிமூலம்–தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **2** | 11 | **2** | 21 | **2** | 31 | **4** |
| 2 | **4** | 12 | **1** | 22 | **4** | 32 | **3** |
| 3 | **2** | 13 | **3** | 23 | **2** | 33 | **1** |
| 4 | **4** | 14 | **4** | 24 | **2** | 34 | **1** |
| 5 | **2** | 15 | **3** | 25 | **1** | 35 | **4** |
| 6 | **4** | 16 | **4** | 26 | **1** | 36 | **3** |
| 7 | **1** | 17 | **2** | 27 | **3** | 37 | **2** |
| 8 | **1** | 18 | **3** | 28 | **2** | 38 | **4** |
| 9 | **3** | 19 | **4** | 29 | **3** | 39 | **3** |
| 10 | **3** | 20 | **3** | 30 | **3** | 40 | **3** |

**தமிழ் மொழியும் இலக்கியமும் II**

01.

1. நாதர் + ஆரிய + நாடு + எங்கள்

2. ஏன் மகனே, நீ உனது/உன்னுடைய மச்சாளிடம்/மைத்துனியிடம் பேசுகிறாய்/பேசுகின்றாய்

இல்லையாம்.

3. இதயமாகிய பேழை - உருவக அணி

4. எழுவாய் - வெளிநாட்டு வாழ்க்கை

பயனிலை - ஏற்படுத்தக்கூடியது

5. தலை - சினையாகுபெயர்

6. அகராதிகளில் கொடுக்கப்பட்டுள்ள இலட்சணங்களும் ஒவ்வொரு வகையில் பிழைப்பாடு

உடையனவாயிருந்தன.

7. இடப்பொருள்

8. பெயரடை - பித்து

9. சாரைப்பாம்பு

10. நியமமொழி, ஒழுங்குச்சிறப்பு, உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துதல், சுவையுடையதாகக் கூறல்

**(20 புள்ளிகள்)**

**02) கட்டுரை**

| | |
|---|---|
| பொருளமைவும் அளவும் | - 12 புள்ளிகள் |
| கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | - 06 புள்ளிகள் |
| எழுத்து நுட்பங்கள் | - 05 புள்ளிகள் |
| தலையங்கம் | - 02 புள்ளிகள் |
| **மொத்தம்** | **- 25 புள்ளிகள்** |

அ. தலைப்பு : 1. சுற்றுலா மையங்களைப் பாதுகாப்போம்.
2. சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வோம்.

- சுற்றுலாத்துறை பற்றிய அறிமுகம்
- இலங்கைக்கு ஏன் சுற்றுலாத்துறை என்பது அவசியம்?
- சுற்றுலாத்துறையால் பெறப்பட்ட நன்மைகள்.
  - ✓ வெளிநாட்டவரைக் கவர்தல்.
  - ✓ அந்நிய செலாவணியை ஈட்டுதல்.
  - ✓ நம் நாடு பற்றிய நல்லெண்ணங்களை வெளிநாட்டவருக்கு ஏற்படுத்தல்.
  - ✓ உள்நாட்டில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்.
  - ✓ பிரதேசப் பெருமைகளை வெளிநாட்டவருக்கு எடுத்துக்காட்டல்.
- சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள்
  - ✓ நாட்டின் தேசிய சொத்து என்பதை மறந்துவிடுதல்
  - ✓ சுற்றுலா மையங்கள் பற்றிய விழிப்புணர்வின்மை.
  - ✓ சுற்றுலா மையங்கள் பாதுகாக்கப்படாமை.
- சுற்றுலாத்துறை பாதிக்கப்படுவதற்கான காரணங்கள்
  - ✓ இனம், மதம், மொழி என்பவற்றால் ஒதுக்கப்படல்.
  - ✓ அதிகப்படியான கட்டணங்கள் அறவிடப்படல்.
  - ✓ அதிகப்படியான கட்டுப்பாடுகள்.
- சுற்றுலாத்துறையை பாதுகாப்பதற்கான வழிவகைகள்.
  - ✓ எம் நாட்டவரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
  - ✓ தனியான அமைச்சுக்களை உருவாக்கி கண்காணித்தல்.
  - ✓ சுற்றுலா மையங்களில் உள்ளோர்க்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
- முடிவுரை: நாட்டின் எதிர்காலம் தம் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஆ. தலைப்பு: 1. இணையக் கல்வியின் அவசியம்.
2. தொலைவழிக் கல்வியின் அவசியம்.

- இணையவழிக் கல்வியின் பயன் பெற்றவரின் கருத்து.
  - ✓ பல்வேறுப்பட்ட தரப்பினரிடமிருந்தும் கல்வி பெறல்.
  - ✓ புதிய விடயங்களை அறிதல்.
  - ✓ நிகழ்நிலைப் பரீட்சைகள் நடாத்துதல்.
  - ✓ ஓரிடத்திலிருந்து கல்வி பயிலல்.
  - ✓ சுயகற்றலுக்கான சந்தர்ப்பம் கிடைத்தல்.
- இணையவழிக் கல்வியின் பயனைப் பெறாதவரின் கருத்து.
  - ✓ தொலைக்காட்சி சேவை தடைப்படல்.
  - ✓ இணையவழித் தொடர்புகள் பெற்றுக்கொள்ள முடியாத சூழல்.
  - ✓ அதிகப்படியான செலவுகள்.
  - ✓ இணையவழிக் கல்வியில் பெற்றோரின் அதிக கண்காணிப்பின்மை.
  - ✓ மன உளைச்சல் ஏற்படல்.
  - ✓ இணையம் தொடர்பான அறிவின்மை.

இ. தலைப்பு: 1. நான் சந்தித்த பழங்குடி மகன்/மகள்

2. எம் நாட்டின் பழங்குடி மக்கள்

- ✓ காட்டிற்குச் சென்ற சந்தர்ப்பம்
- ✓ காட்டில் பழங்குடிகளைச் சந்தித்தல்.
- ✓ பழங்குடி மகன்/மகளின் தோற்றம்
- ✓ அவர்களின் கலாசாரம், பண்பாடு
- ✓ அவர்களது உணவு வகைகள், பழக்கவழக்கங்கள்
- ✓ அவர்களது வாழ்க்கை முறையிலான வேறுபாடு மற்றும் எதிர்மைறயான செயற்பாடுகள்.
- ✓ தனக்கு இவ்வனுபவங்களினால் ஏற்பட்ட மறக்க இயலாத மனப்பதிவுகள்.
- ✓ உள்ளத்து உணர்வுகளைத் தூண்டும் வகையில் இச்சந்திப்பு இடம்பெற்றமை.

ஈ. தலைப்பு: 1. துணிவே துணை

2. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை.

- ✓ சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல்.
- ✓ வழங்கப்பட்ட கருப்பொருளுக்கு அமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்.
- ✓ கதையைச் சுவைபடவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தப் போக்கில் நகர்த்திச் செல்லல்.
- ✓ கதைக்குப் பொருத்தமான மொழிநடையைப் பயன்படுத்தல்.
- ✓ இயல்பான பாத்திர உரையாடலைக் கையாளுதல்.
- ✓ படிப்பினையை மறைமுகமாக வெளியிடல்.
- ✓ முடிவு பொருத்தமானதாக அமைதல்.

**03) சுருக்கம்**

- திராவிட மொழிகளுள் தொன்மை வாய்ந்த, தமிழ் மொழியின் ஆற்றலையும், சிறப்பினையும் வியந்து பாராட்டுகின்றார் கால்டுவெல்.
- இம்மொழியின் நாகரிக மேம்பாடு உச்ச நிலையில் உலகிற்கு அறிவூட்டும் மொழியாக கிரேக்க மொழியுடன் தமிழ்மொழியை ஒப்பிட்டு பேசுகின்றார்.
- திராவிட மொழிகளுள் பெரும் பரப்புடைய மொழி தமிழ்மொழி ஆகும்.
- நான்கு கோடி மக்கள் வாழுகின்ற தமிழ்நாட்டின் மொழியாக இருப்பதுடன் பல தென்கிழக்காசிய நாடுகளிலும் வாழும் மக்கள் தொன்றுதொட்டு பேசும் மொழியாகத் தமிழ்மொழி காணப்படுகின்றது.
- ஓர் மொழியிற் பிறமொழிச் சொற்கள் கலத்தல் தவிர்க்க முடியாததொன்றாகக் காணப்படுகின்றது.
- உலகமயமாக்கல் இடம்பெறும் இச்சூழ்நிலையில் நம் மொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலப்பது தவிர்க்கமுடியாததொன்றாகக் காணப்படுகின்றது.

**(10 புள்ளிகள்)**

| | |
|---|---|
| விடய உள்ளடக்கம் | - 06 புள்ளிகள் |
| சொல்லளவு | - 02 புள்ளிகள் |
| மொழிநடை | - 02 புள்ளிகள் |
| **மொத்தம்** | **- 10 புள்ளிகள்** |

**04) கிரகித்தல்**

1. வெறுமனே ஓர் இலக்கியப் பிரச்சினை மட்டுமல்ல. அதுவொரு சமூகவியல் பிரச்சினையுமாகும்.
2. நாட்டுப்பாடல்களுக்கு முக்கியத்துவத்தினை வழங்கவில்லை.
3. இலக்கிய நயம் வாய்ந்த செந்தமிழ்ப்பாக்களை மனங்கொண்டிருந்தனர்.
4 ஏற்ற மனப்பக்குவம் வேண்டும்.
5 குழந்தைகள் சம்பந்தமானவையாகும். **(10 புள்ளிகள்)**

**05) கடிதம்**

| | | |
|---|---|---|
| அமைப்பு | - 05 புள்ளிகள் | |
| உள்ளடக்கம் | - 07 புள்ளிகள் | |
| மொழிநடை | - 03 புள்ளிகள் | |
| **மொத்தம்** | **- 15 புள்ளிகள்** | **(15 புள்ளிகள்)** |

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

**வினா இல 1**

**சுருக்கமான விடை தருக**

**1.** அ. மிகுதி / மிக
ஆ. அளவு

**2.** அ. தற்குறிப்பேற்றம்
ஆ. காலைப்பொழுது

**3.** அ. நிலைகொள்ளல் / ஆழமாக பதிதல்
ஆ. பேசும் பேச்சால் கதை சொல்லல்.

**4.** அ. பிடுங்கி எறிதல் / பறித்து வீசுதல்
ஆ. உருவக அணி - சுதந்திரத்தினை நல்ல பயிருக்கு உருவகித்துள்ளமை

**5.** அ. தொலை சிறுகதை
ஆ. கதைசொல்லி / அரவிந்தனின் தந்தை

**6.** அ. குதிரை, பறவை
ஆ. தொல்காப்பியம்

**7.** அ. ஏ.பெரியதம்பிப்பிள்ளை
ஆ. வேறுபடாதது / ஒருமைப்பாடு / ஒன்றிலிருந்து ஒன்று மாறுபடாதது

**8.** அ. கடைசி உபாயம் / இறுதி உபாயம் அல்லது போர்
ஆ. தர்மன்

**9.** அ. தழுவிக்கொள்ளல்
ஆ. இரவுக்காட்சி

**10.** அ. ஒளித்துச் செய்வதை அறியாத
ஆ. நீர்நிலை

**வினா இல 2**

**(i)** (அ) நல்லோரை நாடி அவர்களின் உயர்குணங்களை தெரிந்து கொண்டு அவற்றை கடைப்பிடித்து வாழ்தல்

(ஆ) வண்டு காட்டிலிருந்த வந்து தாமரையின் தேனைப் பருகி இன்புறல். அதுபோல அறிவுடையோர் நல்லோரை நாடிச் செல்வர் , அவர்களின் நற்குணங்களை அறிந்து நடப்பர்.

**(ii)** (அ) வயல்களின் வரால் மீன்களின் கூட்டம் உலவுகின்ற அளவிற்கு நீர்வளம் பொருந்தி

அழகிய குருநாடு, அத்தினாபுரி

(ஆ)

- ✓ வளம்மிக்க அத்தினாபுரி நாட்டை சமாதானப் பெறுவதற்கு எண்ணமா?
- ✓ மீண்டும் துன்பம் அடைபவராய் கொடிய காட்டில் திரிவதற்கு எண்ணமோ?
- ✓ பகைகொண்டு செய்யப்டுகின்ற போரில் நமக்கு எதிரில் பிழைக்கப்போவது யாரென்று விரைந்து சினம் கொண்டு எழுந்து போர் செய்ய நினைவோ?

**(iii)** (அ)

- ✓ பட்டிகளில் மாடுகள் வளர்த்தல்
- ✓ பாற்பானை பொங்குதல்
- ✓ விவசாயம் செய்தல்

(ஆ) நாடு செழிக்க வேண்டும் , நல்ல மழைவீழ்ச்சி கிடைக்க வேண்டும் , அதனூடாக ஏர்த் தொழில் மேன்மையடைய வேண்டும். எல்லோரும் சிறப்பாக வாழ வேண்டும் என்று வேண்டுதல்.

**(iv)** (அ) ஆகாசத்திலே கொண்டு போய் - உயர்வு நவிற்சி அணி

(ஆ) பிறிற்றோ கட்சி வெற்றி கிடைக்கும் நிலைக்கு உயர்ந்தமை, இராமநாதன் கட்சி சோர்ந்த போனமை, விசுவநாத பிள்ளையும் நிலை தளர்ந்த போனமை

**(v)** அ)

- ✓ சுகவீனமுற்றிருந்த மூத்தம்மாவை கவனித்தமை
- ✓ மூத்தம்மா குளிர் காய தீ மூட்டியமை
- ✓ சந்தனம் அரைத்து தலையில் பூசியமை

ஆ)

- ✓ அன்னாவி மாமா வந்து ஓதிப் பார்த்தமை
- ✓ ஒரு ரூபாய் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக் கட்டி உச்சவட கல்லு அவுலியாவுக்கு நேர்ந்து வைத்தமை. (நேர்த்திக் கடன் வைத்தல்)

3. அ) **சினிமா சீரழியும் இடங்கள்**

- ஒலி முக்கியத்துவம் பெற்று காட்சிப்படிமங்கள் பின் தள்ளப்படும் போது
- சினிமா மொழியிலிருந்து மாறுபட்டு, வாய்ப்பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் சினிமா நலிவடையும்.
- காட்சிப்படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தைகள் மூலம் கூற முயன்றால் சீரழிகிறது - ஹிட்சாக் கூறியுள்ளார்.
- ஒலிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சினிமா வறண்டு விடுகிறது.
- பேச்சுக்கும் பாட்டுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தல்

ஆ) **சினிமாவை வளப்படுத்தும் முறை**

- காட்சிப்படிமங்களால் கதை சொல்லுதல்.
- அழுத்தமாகவும் ஆழமாகவும் வரிசை ஒழுங்கிலும் காட்சிப்படிமங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
- ஒலி காட்சிப்படிமத்திற்கு தாங்கலாக அமைய வேண்டும்.
- காட்சிப்படிமங்களும் ஒலிப்பதிவுகளும் அர்த்தமுள்ள கோர்வையாக படத்தொகுப்பு மூலமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும்.
- குறியீடுகள் மூலம் மையக்கருவை வலியுறுத்துதல்.
- புதிய தொழில் நுணுக்கங்களை கையாளுதல்.
- சினிமா பற்றிய பரிச்சயத்தை வளர்த்துக்கொள்ளல்.
- சினிமா மொழியின் தனித்துவத்தை பின்பற்றுதல்.

**அல்லது**

**(அ) தருமபுத்திரர்**

- ✓ தருமபுத்திரர் அறத்தையே இலட்சியமாகக் கொண்டவராய்
- ✓ அறத்தின் பயனாகக் கிடைத்த முக்தியின்பத்தையே தியாகஞ் செய்து, சமநிலையே நின்றமையாற் சிறந்த அறநெறிச் செல்வர்களுக்கும் உயர்ந்த உதாரணமாகின்றார்.
- ✓ அவர் முக்தியுலகிற்குச் செல்லும் வழியில் இலட்சியசோதனை நடக்கின்றது.
- ✓ புழுத்த நாயொன்றை அங்கே காண்கின்றார்.
- ✓ பிற உயிர்களைத் தம்முயிரிற் கண்ட சமநெறிச் செல்வராகிய அவர் தமக்கும் நாய்க்குமிடையே ஒருமை காண்கின்றார். அதன் துன்பத்தை தமக்கு வந்ததாகப் பாவிக்கின்றார்.
- ✓ நாயைத் தோளிலே தூக்கி வைத்துக் கொண்டு முக்தியுலக வாயிலையடைகின்றார்.
- ✓ நாயை வெளியே விட்டு உள்ளே புகுமாறு முக்தியுலகம் உத்தரவிடுகின்றது.
- ✓ இந்த நாய்க்கு உரிமையில்லாத முக்தியுலகம் எனக்கு வேண்டாமென மறுத்துக் கூறுகின்றார்.
- ✓ அறத்தின் பயனாகிய முக்தியையும் உடன்கொண்டு முக்தியுலகம் புகுகின்றார்.
- ✓ இது நம் முன்னோர் கண்டனுபவித்து உலகுக்கு உபகரித்த சம நிலைக் கொள்கைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகின்றது.

**(ஆ) அருச்சுனன்**

- ✓ இலட்சியம் அல்லது உயர் குறிக்கோள் என்பது ஒருவர் உண்ணும் உணவினும், பருகும் நீரினும் அவருக்கு இனியது, உயிரினும் பார்க்க இவருக்கு இனியது. என அருச்சுனன் இதனை அறுதியிட்டுக் கூறுகின்றான்.

  ''ஊனமே யான ஊன் இடை இருக்கும்''
- ✓ தசைகளால் ஆக்கப்பட்டது இந்த உடல். அந்த உடலிலே இருப்பது உயிர். அந்த உயிரின் உள்ளே ஒளிபொருந்திய ஆபரணமாக விளங்குவது மானம்.
- ✓ அந்த மானத்தைக் காக்க பூமியிலே வாழும் எல்லோர்க்கும் ஒழுங்கும், குடிப்பிறப்பும், மரபும் ஆகும்.
- ✓ இங்கு அவனது இலட்சியம் மானம் அதுவும் மாண்பு கடவாத மானம்.
- ✓ உயிரைத் துறந்தாவது மானத்தைக் காப்பதே மக்களுக்கு வரிசையும், குடிப்பிறப்பும், மரபுமாகுமென முழங்குகின்ற அருச்சுனனது வாழ்விலே இலட்சியம் முதலிடம் பெறுகின்றது.

**4. குகப்படலத்தில்,**

அ. பரதன் குகனுக்குக் கைகேயியை அறிமுகம் செய்தல்.

- துன்பங்களை எல்லாம் தோற்றுவித்தவள் - தசரதன் இறப்பதற்கும் , இராமன் கானகம் செல்லவும் , உயிர்கள் எல்லாம் துன்பம் அடைதலுக்கும் காரணமானவள். அதனால் துன்பங்கள் எல்லாவற்றையும் தோற்றுவித்தவள் என்று அறிமுகம் செய்கிறான்.
- இராமன் வனம் புகுதலுக்கு தன் தோற்றமும் காரணம் என்பதால் தன்னைத் தாங்கிய வயிற்றையும் 'பாழ்த்த பாவிக்குடல்" என்று கூறி இந்த பாழாய் போன வயிற்றில் நெடுங்காலம் கிடந்தமையால் என் உயிர் பாரம் குறைந்து ஒடுங்கி அழிவதாகக் கூறி அறிமுகம் செய்கிறான்.
- தசரதனது இறப்பினாலும் இராமனது பிரிவினாலும் யாவரும் பிரிவினால் துயருற, ஒருத்தி மட்டும் சிறிதும் துன்பங்கொள்ளதவளாய் இங்கே தோன்றுகின்றாளே, இவளை இவளது முகங்கொண்டே இன்னாரென்று அறியலாம் என்று கூறினான்.
- ''உடலெல்லாம் உயிரிலா எனத்தோன்றும் உலகத்தே ஒருத்திமட்டும் இடரில்லா முகத்தை உடையவளாய் நிற்கின்றாளே'' இவள் தான் என்னை ஈன்ற தாய் என்று வெறுப்புணர்வோடும் கோபத்தோடும் அறிமுகம் செய்கிறான்.

**ஆ) கோசலையின் உயர்ந்த மனப்பாங்கும்**

- வேடுவத்தலைவனாகவிருந்த போதும் , இராமலக்குவர்க்கு கானகத்தே துணையாகவிருப்பதால் குகனையும் மகனாக ஏற்று புதல்வர்களே என்று விளித்துப்பேசியமை.
- உண்மையான வீரர்களான இராமனும் இலக்குவணனும் கானகம் நோக்கி பெயர்ந்தமையும் நன்மையாயிற்று என்று கூறியமை இங்கே குகன் என்ற ஒரு துணைவனை பெறும் வாய்ப்புக் கிட்டியமையாலாகும்.
- மலைபோன்ற திண்ணிய தோள்களையுடைய, கையால் வீரச் செயல்களைச் செய்யும் களிறு போன்ற, காளையாகிய இக்குகன் என்று குகனின் தோற்றத்தையும் வீரத்தையும் பாராட்டிப் பேசுகின்றமை.
- குகனுடன் பரதனையும் சத்ருக்கனையும் இராமலக்குவர்களையும் இணைத்து ''நீங்கள் ஐவீரும் ஒரே தன்மையுடையவராய் பரந்த இடத்தையுடைய நிலம் முழுவதையும் நெடுங்காலம் ஆள்வீர்கள்'' வாழ்த்துரை வழங்கியமை.

**திருக்குறள் பேதைமை** அதிகாரத்தில்,
**அ) பேதைக்குரிய குணம்**

- தனக்குக் கெடுதியானவற்றைக் கைகொண்டு ஊதியமானதைக் கைவிடுதலாகும்.
- பேதைமை எல்லாவற்றிலும் மிக்க பேதைமை தன் ஒழுக்கத்திற்குப் பொருந்தாததில் தன் விருப்பத்தைச் செலுத்துதல்.
- தகாதவற்றிற்கு நாணாமலிருத்தல், தக்கவற்றை தேடிப்பெறாமல் இருத்தல் , எவர் மீதும் அன்பு இல்லாமை, நன்மையொன்றையும் விரும்பாமை
- நூல்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும் பிறர்க்கு எடுத்துரைத்தும், தான் அவற்றின் நெறியில் அடங்கி ஒழுகாமை.
- எழுபிறப்பிலும் தான் புகுந்து அழுந்துவதற்கு உரிய நரகத் துன்பத்தைப் பேதை தன் ஒரு பிறவியில் செய்துகொள்ளல்.

**ஆ) பேதை இழிவுப்படுத்தப்பட்ட முறை**

- பேதை தன் கையில் ஒரு பொருள் பெற்றால் பித்துப்பிடித்த ஒருவன் கள் குடித்து மயங்கினாற் போல் நடந்துகொள்ளல்
- பேதையரிடமிருந்து பிரிவு நேர்ந்தபோது அப்பிரிவு துன்பம் ஒன்றும் தருவதில்லை. ஆதலால் அறிவிலிகளின் நட்பு இனியது.
- சான்றோரின் கூட்டத்தில் பேதை புகுதல், ஒருவன் தூய்மையில்லாதவற்றை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையில் வைத்ததைப் போன்றதாகும்.

**5. தத்தைவிடு தூது** என்ற இலக்கியத்தில்,
அ. பெண்களிடத்தே தலைவன் விரும்பும் மாற்றங்கள்

- ✓ மூடர், பேடர், முதியோர் மற்றும் மெலியோருக்கும் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தல் கூடாது.
- ✓ பெண்ணருமையை அறியாதவருக்கு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தல் கூடாது.
- ✓ தம்முடைய பெருமை அறியாதவருக்கு பெண்ணைத் திருமணம் செய்து வைத்தலாகாது.
- ✓ பெருமையுடைய கல்வியை நலமாக பெற்றிருப்பவர்க்கு திருமணம் செய்து கொடுக்கவேண்டும்
- ✓ பெண்கள் கல்வி கற்க வேண்டும்.
- ✓ பெண்களுக்கு தம்பதியே பெரும் தெய்வம் என்ற எண்ணம் மாற்றப்படவேண்டும்.
- ✓ பெண்களுக்கும் அடிமைகளுக்கும் பேதமில்லை என்ற எண்ணம் மாற்றப்படவேண்டும்.

**ஆ) தலைவியை வர்ணிக்கும்** விதம்

- ✓ மானே ஏங்கும் மைவிழி, வஞ்சியிடை பைந்தொடி
- ✓ செங்கமல வாள் விழியாள், கிஞ்சுக வாய்ப் பைந்தொடி
- ✓ அன்ன நடையுடையவள், அழகிய பொன் மலர்க்கொம்பு போன்றவள்
- ✓ இலக்குமி போன்றவள், பெண்களுக்கெல்லாம் அரசியானவள்
- ✓ கரும்பு போன்ற மொழி பேசுபவள், தாமரை முகத்திற்கு ஒப்பானவள்
- ✓ பசுமையான கூந்தலை உடையவள்

6. **தமிழ்ப்பண்பாடு** என்ற கட்டுரையில்,
அ. **தமிழ் இலக்கியங்களில் பக்திக்கான சான்றுகள்**

- ✓ பரிபாடலில் - யாமிரப்பவை பொருளும் பொன்னும்
- ✓ விபுலானந்தர் - வெள்ளை நிற மல்லிகையோ
- ✓ அப்பர் சுவாமிகள் - மாசில் வீணையும்
- ✓ சமயப் பொருளற்ற பிறநூல்கள்
- ✓ பாரதி தாசன் பாடிய தமிழ்மொழிப் பற்றிய பாடல்கள் பக்திச் சொற்களை மிகுதியாகக் கொண்டவை
- ✓ நாயன்மார், ஆழ்வார் பாடல்கள்

**ஆ) பிறநாடுகளில் பக்தி வளர்ச்சியடைந்தமைக்குமான சான்றுகள்**

- ✓ இந்தோனேசியாவில் இருக்கும் பிறம்பாணான் பாணாத்தரான் கோயில்கள்
- ✓ கம்பூச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள் , சிற்பங்கள்
- ✓ தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவை
- ✓ உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம்

7. **தனிப்பாடல்** பகுதியில் **பங்கப் பழனத்துழு முழவர்**.., என்னும் பாடலில்
**அ) சோழ நாட்டின் வளம்**

- ✓ நீர்வளம் - வயல்களில் மிகுதியான சேறு
  பலாக்கனிகள் , இளநீர்
- ✓ வயல்களில் மிகுதியான சங்குகள்

**ஆ. பெண்ணின் துயர்**

- ✓ பிறரை வருத்துகின்ற இயல்புடைய சந்திரனும் கரும்புவில் பிடித்த மன்மதனும் தலைவனைப் பிரிந்த தலைவியை வருத்துதல்.
- ✓ தலைவி, தலைவனைப் பிரிந்து வேல்போன்ற விழிகளிலிருந்து கண்ணீர் சிந்துதல்.

*****